
குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
ஜென்னும்
வேதாத்திரியமும்...
பாகம்- 2
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# இதனுள்ளே

1. குருவின் சேர்க்கை
2. சினமும் அச்சமும் வாழ்வைச் சீர்குலைக்கும்
3 இன்று என்பதே நிஜம்
4. கோபம் ஆன்மீக வாழ்வுக்குத் தடையா?
5. மகிழ்ச்சிக்கு வழி எது?
6. ஒப்பீடா? பொறாமையா
7. குற்றமே காணும் குறையுடையோர்
8. தான் என்ற செல்வாக்குப் பற்று
9. அறிவுரை எப்படி இருக்க வேண்டும்?
10. பணிவு கனிவு துணிவு
11. தொண்டாற்றி இன்பம் காண்போம்
12. சீடனும் குருவும்
13. மனவளர்ச்சி
14 .மானுடத்தின் வீரர்கள்
15. துன்பங்கள் குறைய வழி எது?
16. சீராக வாழ்வோம்
17. அச்சம் தேவையா?
18. நினைக்க வேண்டியது என்ன!
19 அறிவின் அனுபவம்
20 மௌனமே ஞானம்
21. ஆணவம் நீங்கிய அமைச்சர்
22. கோபமும் காலிப்படகும்
23. வாழ்வோம் வளமோடு
24. அனுபவமே குரு.
25. வாழ்வே ஒரு போராட்டமா?
26. மன நிறைவு பெற வழி
27. சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்
28. வெற்றியின் இரகசியம்

29. பிறப்பும் இறப்பும்
30. தொண்டே தொழுகை
31. பழக்கமும் விளக்கமும்
32. “இது கடந்து போகும்”
33. சித்து வேண்டாமே!
34. ஞானத்தின் முதிர்ச்சி

# 1. குருவின் சேர்க்கை

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஓர் ஊரில் ஜென் மாஸ்டர் கத்தான் என்பவர் வாழ்ந்து வந்தார்.

அவர் ஒரு குறிப்பில் “ஒரு சீடன் என்பவன் யார்? என்பதை,

- சீடன் என்பவன் புத்தமதக் கருத்துக்களை மற்றவர்களுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும்,
- மடாலயத்தை மிகவும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்
- மற்றும் அரிசி மூட்டை, துணி மூட்டை ஆகியவற்றை எங்கும் பத்திரமாக தூக்கவும், சுத்தமாக அவற்றை வைத்துக் கொள்ளவும் வேண்டும்

என்னும் மூன்று கருத்துக்களின் மூலம் தெளிவாக கூறியுள்ளார்.

அதேபோல் தான் கசன் என்னும் சீடன், தன் குருவிற்கு மிகவும் ஒரு நல்ல சீடனாக இருந்தான்.

ஆனால் அவனுடைய குரு மிகவும் கோபம் கொள்பவர்.

அவர் தன் சீடர்களுக்கு புத்தமதக் கருத்துக்களை சொல்லிக் கொடுக்கும் போது எப்போதுமே மிகவும் கடுமையாகவே இருப்பார்.

சிலசமயங்களில் அடிக்க கூட செய்வார். அதனாலேயே நிறைய சீடர்கள் அவரிடம் கல்வி கற்காமல் சென்று விட்டனர்.

ஆனால் கசன் மட்டும் அவரை விட்டு செல்லாமல், அவருடன் இருந்தான்.

ஏனெனில் அவன் ஜென் மாஸ்டர் கத்தான் கூறிய ஒரு குறிப்பு –

“நல்ல சீடனாக இல்லாதவன், எங்கு சென்றாலும் தனது குருவின் செல்வாக்கை பயன்படுத்துவான், நியாயமான சீடனாக இருப்பவன் தனது குருவின் இரக்கத்தால் ஈர்த்து மட்டும் இருப்பான்,

ஆனால் நல்ல சீடன் என்பவன் அவருடன் இருந்து அவரிடம் இருக்கும் அனைத்தையும் கற்றுக் கொண்டு வளர்வான்” என்பதை படித்ததால், இவனும் ஒரு நல்ல சீடனாக தன் குருவிற்கு இருக்கிறான்.

## குருவின் சேர்க்கை என்ன செய்யும்? வேதாத்திரியம்

“– –எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்
தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்
தரத்தில் உயர்த்திப் பிறவிப் பயனை நல்கும்.” (ஞாக.பா.10)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 2.சினமும் அச்சமும் வாழ்வைச் சீர்குலைக்கும் (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு கோபக்கார ஜென் சீடன் தன் குருவிடம் கேட்டான்.

என்னால் எனது கோபத்தை கட்டுப்படுத்த இயலவில்லை. அதற்கு ஒரு உபாயம் சொல்லுங்கள்.

அதற்கு ஜென்குரு உனது கோபம் எங்கே? எனக்குக் கொஞ்சம் காட்டு! என்றார்.

சீடன் ஆச்சரியப்பட்டான். இப்போதைக்கு என்னிடம் கோபம் இல்லை, அதனால் என்னால் அதைக் காட்ட முடியாது என்றான்.

அதற்கு அவர் பிரச்னை ஒன்றும் இல்லை. கோபம் வரும்போது என்னிடம் கொண்டுவந்து காட்டு! என்றார்.

சீடன் வெறுப்புடன், கோபம் வந்தவுடன் என்னால் கொண்டு வந்து காட்ட முடியாதே என்றான்.

மேலும் எதிர்பாராத வேளையில் கோபம் வரும். அதை நான் உங்களிடம் வந்து காட்டுவதற்குள் நிச்சயமாக மறைந்தே போய்விடும்! என்றான் சீடன்.

அப்படியானால் கோபம் என்பது உனது உண்மையான இயல்பாக இருக்க முடியாது என்றார் ஜென் குரு.

கோபம் உனது உண்மையான இயல்பாக இருக்கும் எனில் அதை எந்தச் சமயத்திலும் என்னிடம் கொண்டு வந்து காட்ட முடியும்.



நீ பிறக்கும்போது உன்னிடம் அது இல்லை. உனது பெற்றோரும் உன்னிடம் தரவில்லை. அதனால் அது வெளியிலிருந்துதான் வந்திருக்க வேண்டும்.

எப்போதெல்லாம் கோபம் வருகிறதோ அதை ஒரு பிரம்பால் அடித்து விரட்டு! என்றார் குரு.

சினமும் அச்சமும் வாழ்வைச் சீர்குலைக்கும். சினம் தவிர்ப்பு பழகுங்கள். குடும்பம், நண்பர்கள், தொழில் செய்யுமிடத்திலுள்ளோர், உற்றார் உறவினர் இவர்களிடம் உங்கள் அன்பு, நட்பு, இவைபெருகும். இனிமையும் மகிழ்ச்சியும் உண்டாகும்.

“சினம் அச்சம் இரண்டும் ஓர் மனிதன் வாழ்வில்
சீர்குலையச் செய்யும் கொடும் உட் தீயாகும்!
சினம் அச்சம் ஒழிய, சிந்தனையை ஏற்றிச்
சிவன் சீவன் நிலைகளை நன்குணர வேண்டும்.” (ஞாக.பா.1565)

**வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.**

# 3 இன்று என்பதே நிஜம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு முறை ஜென் துறவி தனது சீடர்களுக்கு அறிவுரை வழங்கிக்கொண்டிருந்தார்.

“இன்று என்பது மட்டுமே நிஜம், நாளை என்பது மாயை. அதனால் எந்த ஒரு காரியத்தையும் நாளை செய்து கொள்ளலாம் என்று தள்ளிப்போடாமல், இப்பொழுதே செய்துவிட வேண்டும்.

அதேசமயம் நாளை நடக்க இருப்பதை நினைத்து, இன்றைய பொழுதை இழந்துவிடக் கூடாது” என்று அறிவுறுத்திக் கொண்டிருந்தார்.



அப்போது அந்த வழியாக வந்த ஒரு போர்வீரன், துறவியின் கூற்றை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

பின்பு ஒரு நாள் அந்த போர் வீரன் தனது எதிரிகளால் கைப்பற்றப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டான்.

அன்றிரவு முழுவதும் அவனால் தூங்க முடியவில்லை. ஏனெனில், அடுத்த நாள் நடக்க இருக்கும் சித்தரவதைகளை பற்றி யோசித்து கொண்டிருந்ததால் அவனது தூக்கம் கலைந்தது.

சிறையில் இருந்த ஜன்னல் கம்பியை வளைத்து கூர் கம்பியாக மாற்றினான். அதை வைத்து தற்கொலை செய்து கொள்வது அவனது எண்ணமாக இருந்தது.

அப்போதுதான் ஜென் துறவியின் அறிவுரைகள் நினைவுக்கு வந்தன.

“நாளை என்பது மாயை, இன்று என்பது மட்டுமே நிஜம்” என்ற ஜென் துறவியின் கூற்றை மனதில் கொண்டு நிம்மதியாக உறங்கினான்.

மறுநாள் பொழுதும் விடிந்தது. அதிசயம் நிகழ்ந்ததை போன்று, போர்வீரனை அவனது நண்பர்கள் காப்பாற்றினர்.

“பிறப்பு இறப்பு நடுவே பூவுலக வாழ்வு இதை
மறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை.” (மாக்.16.)

மாயையும் ஞானமும்”

“உருவத்தின் முன்தொடர்போ வித்தின் மூலம்,
உயர் அறிவிற்கோ மூலம் உருவமாகும்.
பருவத்திற் கேற்றபடி உணர்ச்சியூடே,
பல தொழில்கள் ஆற்றும்மதி வேகம்கூட,
அருவத்தில் வியாபித்தாம் அகண்டாகாரம்
அந்நிலையில் அனுபவமாம். இவ்விரண்டில்
மருவித் தான்பெற்ற பலத்துக் கேற்ப,
மறப்பதும் பின் நினைப்பதுமே மாயை-ஞானம்” (ஞாக.பா.1362)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 4. கோபம் ஆன்மீக வாழ்வுக்குத் தடையா?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

யமோகா தேஷு, அவர் ஒரு இளம் ஜென் மாணவன். அவன் ஒன்றன் பின் ஒன்றாக ஒவ்வொரு குருவையும் சென்று பார்த்து வந்தான்.

அப்போது ஷோகொகு என்ற ஒரு ஊரில் டோகுஒன் என்ற ஒரு குருவை சந்தித்தான். பின் அவரிடம் தன்னுடைய திறனை காட்ட விரும்பினான்.

அதனால் அவரிடம் அவன், "எண்ணம், புத்தர், மற்றும் புலனறிவாற்றலுள்ள உயிர்கள் என்று இந்த உலகில் எதுவும் இல்லை. இந்த உலகில் நிகழும் அனைத்தும் நிகழ்வுகளின் உண்மையான இயல்பும் வெறுமையே.

மேலும் இந்த உலகில் வாழும் எவருக்கும் எந்த உணர்தலும், மாயையும், முனிவரும் இல்லை.

அதுமட்டுமல்லாமல் எவரும் எதையும் கொண்டு வருவதும் இல்லை, எதையும் கொண்டு செல்வதும் இல்லை" என்று கூறி தன்னை ஒரு பெரிய ஜென் மாஸ்டர் போன்று காண்பித்துக் கொண்டான்.

டோகுஒன், அமைதியாக எதுவும் பேசாமல் புகைத்து கொண்டிருந்தார்.

அப்போது திடீரென்று அவர், மூங்கில் குழாய் ஒன்றை எடுத்து, யமோகாவை வெளுத்து வீசினார். இந்த சம்பவம் அந்த ஜென் மாணவனுக்கு மிகவும் கோபத்தை ஏற்படுத்தியது.

பின்னர் அந்த குரு அவனிடம், “இந்த உலகில் எதுவும் இல்லை என்றால், இந்த கோபம் மட்டும் எங்கிருந்து வந்தது?” என்று கேட்டார்.

“சினம் நமது ஆன்மீக உயர்வுக்கு தடையாகிறது. மன அலைச் சுழல் அதிகரிப்பதால் ஏற்படும் உடல் மனக்கேடு பதிவுகளைக் கூட்டிக் கொண்டடேயிருப்பதால் பிறவிப் பயன் கிட்டாது. தவமும் இறையுணர்வும் சினத்தை தவிர்த்து வெற்றியளிக்கும். (வேதாத்திரி மகரிஷி பொன்மொழிகள் 5000)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 5.மகிழ்ச்சிக்கு வழி எது?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒருவர் எப்போதுமே மனது கஷ்டத்துடன் வாழ்ந்து வந்தார். ஒரு நேரத்தில் அவரால், மனக்கஷ்டத்தை தாங்க முடியவில்லை.

அதனால் அவர் ஒரு ஜென் துறவியை நாடி, அதற்கான காரணத்தை அறிய வேண்டும் என்று முடிவெடுத்து, துறவியைப் பார்க்க புறப்பட்டார்.

துறவி ஒரு மரத்தின் அடியில் தியானம் செய்து கொண்டிருந்தார்.

அவரிடம் அருகில் சென்று “குருவே! எனக்கு எப்போதுமே மனம் கஷ்டமாக உள்ளது. அதை எப்படி போக்குவது?” என்று கேட்டார்.

அதற்கு குரு அவரிடம், “ஒவ்வொரு நாளும் காலையில் எழும் போது நீ என்ன நினைப்பாய்? நீ என்ன எண்ணுவாய்?” என்று கேட்டார்.

அதற்கு வந்தவர், “இன்றும் மனம் கஷ்டமாக இருக்குமோ! என்று நினைத்து எண்ணிக் கொண்டே எழுவேன்” என்றார்.

அப்போது குரு “இது தான் தவறு. நீ உன் மனம் கஷ்டமாக இருப்பதற்கு நீ தான் காரணம்.

காலையில் எழும் போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் ஆனந்தமாக இருக்கிறேன் என்று மனதில் நீயாகவே நினைத்தால், எண்ணினால், கண்டிப்பாக நீ சந்தோஷத்தை உணர்வாய். கஷ்டம் என்று நினைத்தால் கஷ்டத்தை தான் உணர்வாய்” என்று கூறினார்.

## எண்ணம் நற்பயனாய் மாற – வேதாத்திரியம்

“எண்ணத்தை எண்ணத்தால் எண்ணி எண்ணி,
எண்ணத்தின் இருப்பிடமும் இயல்பும் கண்டு,
எண்ணத்தை எண்ணத்தில் நிலைக்கச் செய்தால்,
எண்ணமே பழக்கதால் தெளிந்து போகும்
எண்ணமது எழும்போது “இது ஏன்?” என்று
எண்ணத்தால் ஆராய்ந்தால், சுலபமாக
எண்ணத்தின் காரணமும் விளைவும் காணும்.
எழும் எண்ணம் யாவும் நற்பயனாய் மாறும்.” (ஞாக.பா.1529)

ஆகவே எதுவுமே, அவரவர் மனநிலையைப் பொறுத்தே உள்ளது என்பதை இந்த கதை நன்கு தெளிவாக கூறுகிறது.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 6. ஒப்பீடா? பொறாமையா

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு பேராசிரியர் ஒரு ஜென் ஞானியிடம் சென்று, ''நான் ஏன் உங்களைப்போல இல்லை? உங்களைப் போல என்னால் ஏன் அமைதியாய் இருக்க முடியவில்லை? உங்களுக்கு இருக்கும் அறிவு எனக்கு ஏன் இல்லை?'' என்று கேட்டார்.

ஞானி சொன்னார், ''இன்று முழுவதும் என்னுடன் இருந்து என்னை கவனித்து வா. எல்லோரும் சென்றவுடன் உன் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன்.''

அன்று முழுவதும் ஏராளமான மக்கள் ஞானியை வந்து தரிசித்து சென்றனர்.

மாலையில் எல்லோரும் போன பின் பேராசிரியர் ஞானியிடம் தன் கேள்விக்கு பதில் சொல்ல ஞாபகப்படுத்தினார்.

அன்று பௌர்ணமி. முழு நிலவு வானில் அழகுடன் ஜொலித்தது.

ஞானி கேட்டார்,''இன்னுமா உனக்கு பதில் கிடைக்கவில்லை? நான் மக்களுக்கு சொன்ன பதில்களைக் கவனித்திருந்தால் உனக்கு பதில் கிடைத்திருக்கும். பரவாயில்லை வெளியில் வா.

இந்த அமைதியான தோட்டத்தில் முழு நிலவின் அழகினைப் பார். இந்த நிலவொளியில் இந்த நீண்ட மரமும் அதன் அருகில் உள்ள செடியும் எவ்வளவு அழகாய் இருக்கின்றன?''.

பேராசிரியர் பொறுமை இழந்து தன் கேள்விக்கு பதில் சொல்லுமாறு கேட்டார்.

ஞானி சொன்னார், ''உன் கேள்விக்கு பதில் சொல்கிறேன். இந்த நீண்ட மரமும் அதன் அருகில் உள்ள செடியும் வெகு நாட்களாக என் தோட்டத்தில் இருக்கின்றன.

ஆனால் ஒரு நாளும் இந்த செடி, தான் ஏன் இந்த பெரிய மரம் போல இல்லை என்று மரத்திடம் கேட்டதில்லை.

அதேபோல மரமும், அந்த செடியிடம் தான் ஏன் செடிபோல இல்லை என்று கேட்டதில்லை.

மரம், மரம் தான். செடி, செடி தான். மரம் தான் மரமாயிருப்பதிலும், செடி தான், செடியாயிருப்பதிலும் மகிழ்ச்சியுடன் தான் இருக்கின்றன என்றார்."

ஒப்பீடு தான் மனிதனின் அனைத்து பிரச்சினைகளுக்கும் மூலக் காரணம். ஒப்பிடுதான் பொறாமைக்கு காரணமாக அமைகிறது.

## பொறாமையை அகற்றுவோம் – வேதாத்திரியம்

- பொறாமை என்பது பொறுக்க முடியாமை என்று பொருள்படும். பொருள், புகழ், அதிகாரம், அனுபோகம் என்ற நான்கு வகையில் தனக்கு மேலாகவோ, தனக்கு சமமாகவோ இருப்பதை அறியும் போது அதை பொறுக்க முடியாத ஒரு குறுகிய எல்லையுடைய மயக்கமான மனோநிலையே பொறாமையாகும்.

- நல்வாழ்வை விரும்பும் எவரும் தன்னிடம் பொறாமை அல்லது ஒப்பீடு என்பது ஏற்படும்போதே அதனை கூர்ந்தறிந்து விலக்க வேண்டும்.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 7. குற்றமே காணும் குறையுடையோர்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் தன் மடாலயத்தில் சீடர்களுடன் தங்கி வாழ்ந்து வந்தார்.

அவர் ஒரு நாள் தன் சீடனுடன் டீ குடிக்க சென்றார்.

அப்போது அந்த சீடனான ரோஷி என்பவன் துறவியிடம் “ஏன் தான் இந்த ஜப்பானியர்கள் இந்த டீ கோப்பையை இவ்வளவு மெல்லியதாக தயாரித்துள்ளனரோ, இது கை நழுவி கீழே விழுந்தால் உடனே உடைந்துவிடும் போலவும் உள்ளது.

இதை கொஞ்சம் பருமனாக செய்திருந்தால் கீழே விழுந்தாலும் உடையாமல் இருக்கும் அல்லவா!” என்றான்.

அதற்கு குருவும் அவனிடம் “அவர்கள் கோப்பையை மெல்லியதாக தயாரித்ததில் தவறில்லை. அவற்றை நம்மால் சரியாகக் கையாளத் தெரியாததே தவறு.

முதலில் நாம் எந்த ஒரு பொருளையும் எப்படி கையாள வேண்டும் என்பதை தெரிந்திருக்க வேண்டும். அதை விட்டு மற்றவர்களை குறை கூறுவது தவறு” என்று கூறினார்.

“நாம் நம்மை பற்றி முழுவதும் அறியாமல் பிறரை குறை கூறுவதில் முழுமையாக உள்ளதால் எல்லாம் தவறாகவே தெரிகிறது.

பிறரைக் குறை கூறுவதை நிறுத்திவிட்டு நம்மை நாம் திருத்திக் கொள்ள முயல வேண்டும்” என்பது நன்கு புரிகிறது

## நிறை காண்வோம் – வேதாத்திரியம்

“குற்றமே காணும் குறையுடையோர் வாழ்வினிலே
பெற்ற பயன், சினம் வஞ்சம் பொறாமை வருத்தம் இவற்றால்
முற்றும் இழந்தார் வாழ்வின் இன்பமும். பிறவிப்பயன்,
நற்றவத்தோர் வழிநின்று நல்லவெலாம் ரசிப்போம்.” (ஞாக.பா.1612)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 8. தான் என்ற செல்வாக்குப் பற்று

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

சீன பேரரசர் வ்ஹு என்பவர் புத்த மதத்தை உறுதிப்படுத்தும் உன்னத நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார்.

அதனால் அவர் புத்தமதக் கோயில்கள் மற்றும் மடாலயங்கள் கட்டுவது, புத்த துறவிகளுக்கு கல்வி மற்றும் மனிதநேய செயல்கள் போன்ற பணிகளை மிகவும் ஆர்வத்துடன் செய்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் பேரரசர் பெரிய புத்த ஆசிரியரான போதி தர்மாவிடம் "என் நற்பணிகளுக்கான தகுதி என்ன?" என்று கேட்டார்.

போதி தர்மா அதற்கு "இதுவரை ஏதும் இல்லை" என்று அரசர் எதிர்பாராத பதிலைச் சொன்னார்.

பின்பு பேரரசர் அவரிடம் "சரி, உண்மையில் புனித நிலை என்றால் என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

அதற்கு குருவும் "புனிதம் இல்லை, வெறும் வெறுமை" என்று அவரின் கேள்வியை சரி செய்தார்.

மறுடியும் பேரரசர் போதி தர்மாவிடம் "பிறகு என்னை யார் வழி நடத்துவது" என்று கேட்க, குரு "எனக்கு தெரியாது" என்று பதில் அளித்தார்.

தான் கேட்ட கேள்விகளுக்கு சரியான பதிலைத் தரவில்லை என்று போதிதர்மாவின் மேல் பேரரசர் கோபம் கொண்டதால், போதி தர்மா இராஜ்ஜியம் விட்டு சென்றார்.

பின்னர் பேரரசர் வ்ஹு, இளவரசர் ஷிகோ மற்றும் ஆலோசகருடன், அதனைப் பற்றி பேசிக் கொண்டிருக்கையில்தான் பேரரசருக்கு போதிதர்மாவின் பெருந்தன்மையும், அவரது பதிலுக்கான உண்மையும் அரசருக்கு தெரிய வந்தது.

அதனால் அவர் வருத்தம் கொண்டு மீண்டும் போதி தர்மாவை ராஜ்ஜியத்திற்கு வருமாறு தூது அனுப்பினார்.

அப்போது இளவரசர் சிகோ “இந்த உலகில் உள்ள எல்லா மக்களை அனுப்பினாலும் அவர் இனி திரும்ப மாட்டார்” என்றான்.

**தான் – தனது என்ற பற்று பழிச்செயலாகும்** வேதாத்திரியம்.

தான் என்னும் செல்வாக்குப் பற்றும், மற்றும்
    “தனது” எனும் பொருள் பற்றும் தன்முனைப்பாம்.
ஊன் உருவில் உணர்ச்சிகளாய் அறு குணங்கள்
    உருவாகி எழும் செயல்கள் துன்பம் நல்கும்.
ஆன்மாவின் இச்செயல்கள் பதிவு பெற்றால்,
    அவையேதான் பழிச் செயல்கள் பதிவு ஆகும்.
“நான் யார்?” என்றறியாத மயக்கத்தோடு,
    நலமறியா புலன்மயக்கம் மாயை ஆகும்” (ஞாக.பா.1622)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 9.அறிவுரை எப்படி இருக்க வேண்டும்?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ரியோகன் என்பவர் ஒரு பெரிய பணக்காரர். அவரிடம் ஒரு பெரிய எஸ்ட்டேட் ஒன்று இருக்கிறது.

ஆனால் அவர் ஜென் துறவறத்தில் ஈடுபட விரும்பினார்.

அதனால் அவர் தன் குடும்பத்தினை நிர்வகிக்கும் பொறுப்பினை, அவரது மருமகனிடம் ஒப்படைத்துவிட்டு சென்றார்.

ஆனால் அவரது மருமகனோ பணத்தினை செலவழிப்பதில் சிறந்தவன்.

அவனது செயல்களைக் கண்டு அவனது குடும்பத்தினரும், எஸ்டேட்டில் வேலை செய்பவர்களும் பயந்தனர்.

ஆகவே அவர்கள் ரியோகனை கண்டு, அவரிடம் அவனைப் பற்றி குறை கூறினர்.

ரியோகனும், மருமகனைக் கண்டு பல வருடங்கள் ஆனதால், அவனைக் காணச் சென்றார்.

அவரது மருமகனும் மாமாவைக் கண்ட மகிழ்ச்சியில், அவரை அன்று இரவு முழுவதும் தன்னுடன் தங்குமாறு வேண்டிக் கேட்டுக் கொண்டான்.

ரியோகனும் ஒப்புக் கொண்டு, அன்று இரவு முழுவதும் தியானம் செய்து கொண்டே இருந்தார். விடிந்ததும் ரியோகன், தியானத்தை களைத்து புறப்படத் தயாரானார்.

அவர் புறப்படும் போது, தனது மருமகனிடம் “தனக்கு வயசாகிவிட்டது என்றும், என் கைகள் நடுங்குகிறது, தன் வைக்கோல் செருப்புகளை எடுத்து தருமாறு கேட்டார்”.

மருமகனும் அவனுடைய மாமாவின் விருப்பத்திற்கேற்ப, அவருடைய செருப்பை எடுத்து கொடுத்து உதவினார்.

பின் ரியோகன் அவனுக்கு நன்றி கூறி “மனித உடல் மிகவும் அற்பமானது. அது நாளுக்கு நாள் வேகமாக முதுமை அடைகிறது. நீ உன்னை பார்த்துக்கொள்” என்று சொல்லிச் சென்றார்.

ஆனால் அவர், உறவினர்கள் அவன் நடவடிக்கைகளைப் பற்றி புகார் செய்ததை பற்றி அவர் ஒரு வார்த்தை கூட பேசாமல் அங்கிருந்து சென்றார்.

உண்மையை அறிந்த அவன் அன்று முதல் ஒரு புதியவனாக மாறினான்.

## அறிவுரை – வேதாத்திரியம்

"தவறு செய்யப்பட்ட கையோட புத்தி சொல்லக் கூடாது. குத்திக் காட்டுவது போல் அறிவுரை இருக்கக் கூடாது. (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 பாக.1 –பக்.29)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 10.பணிவு கனிவு துணிவு

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு நாள் இளம் புத்த துறவி ஒருவன் தன் வீட்டிலிருந்து பயணத்தை தொடர்ந்தான்.

அப்போது வீட்டின் முன் இருக்கும் ஒரு பரந்த ஆற்றை பார்த்தான். அப்போது அந்த பயணத்திற்கு தடையாக இருக்கும், இந்த ஆற்றை எப்படி கடப்பது என்று மணிகணக்கில் ஒரே யோசனையுடன் இருந்தான்.

அவ்வாறு அவன் யோசித்துக் கொண்டிருக்கையில், ஆற்றின் மறுபக்கம் இருக்கும் ஒரு பெரிய துறவியைப் பார்த்தான்.

பின் அவரை கனத்த குரலுடன் அழைத்து, ஒரு பெரியவர் என்ற மரியாதை இல்லாமல் "ஓ புத்திசாலியே, எப்படி மறுகரையை அடைவது என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டான்.

அதற்கு அந்த பெரிய துறவி சற்று யோசித்து, அந்த ஆற்றை பார்த்து, கனத்த குரலுடன் “மகனே, நீயே மறுகரையில் தான் இருக்கிறாய்” என்று சொல்லி சென்று விட்டார்.

## மனித வளம் – வேதாத்திரியம்

- பணிவு, கனிவு, துணிவு ஆகியன மனித வளத்தை உயர்த்த வல்ல பண்புகளாகும். பணிவு என்பது அடிமைத்தனமல்ல. ஒத்துப் போதல் என்ற கருத்தில் சமநிலை நேர்மையாகவே பணிவினைக் கருத வேண்டும். கனிவு என்பது பிறர் விருப்பத்தைக் கருணையோடும் விளைவறிந்த விழிப்போடும் நிறைவேற்றும் இருக்க மனநிலையே தான். துணிவு என்பது தன்னம்பிக்கை. (அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்

# 11. தொண்டாற்றி இன்பம் காண்போம்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

வயதான ஜென் குரு ஒருவர் பாதாம் செடிகளை வைப்பதில் மிகவும் தீவிரமாக ஈடுபட்டிருந்தார்.

அதற்காக அவர் செடிகள் நட்டு வைப்பதையே ஒரு வேலையாக செய்து கொண்டிருந்தார்.

அப்போது அந்த மலைகள் வழியாக வந்த பயணி ஒருவர் இவரது செயல்களைப் பார்த்தார்.

அந்த பயணிக்கு ஏற்கனவே, இந்த பாதாம் மரங்கள் வளர நீண்ட நாட்கள் எடுத்து கொள்ளும் என்பது நன்கு தெரியும்.

அதனால் அவர் அந்த வயதான குருவிடம் சென்று “நீங்கள் மிக மெதுவாக வளரும் மரமான பாதாமை நட்டு வைக்கின்றீர்” என்று கூறினார்.

அதற்கு அந்த குரு “நான் என் வாழ்க்கையில் இரண்டு கொள்கைகளைப் பின்பற்ற விரும்புகிறேன்.

ஒன்று நான் எப்போதும் உயிருடன் இருப்பேன், மற்றொன்று, இதுவே என் வாழ்வின் கடைசி நாள்” என்று கூறினார்.

அதன் காரணமாகத் தான் நான் இந்த செடியை நட்டு வைக்கிறேன் என்றும் கூறி வேலையை தொடர்ந்தார்.

தொண்டாற்றி இன்பம் காண்போம்  வேதாத்திரியம்

“நீதி நெறி உணர் மாந்தராகி வாழும் நிலையுணர்ந்து
தொண்டாற்றி இன்பம் காண்போம்.” (ஞாக.பா.1)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 12. சீடனும் குருவும்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் குருவின் சீடர்கள் சைக்கிளில் சென்று திரும்புவதை கண்டு “ஏன் நீங்கள் சைக்கிள்களில் சவாரி செய்கிறீர்கள்?” என்று விசாரித்தார் குரு

அதற்கு ஐந்து பேரும் வெவ்வேறு பதிலை குருவிடம் சொன்னார்கள்.

அதில் முதல் சீடன் “நான் வாங்கி வரும் உருளைக் கிழங்குகளை கையிலோ முதுகிலோ சுமப்பதை காட்டிலும், சைக்கிளில் அதன்

கூடையில் வைத்து வருவது சுலபம் என நினைத்து, நான் சைக்கிள் ஓட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்று குருவிடம் சொன்னான்.

அதற்கு குரு அவனிடம் "நீ மிகவும் சுறுசுறுப்பானவன், நீ வயதானபின் என்னை போலவே கூன் போடா மாட்டாய்" என்றார்.

இரண்டாவது சீடன் குருவிடம் "நான் இயற்கையை ரசிக்க சைக்கிள் சவாரி செய்தேன்" என்றான்.

குருவும் அதற்கு "உன் கண்கள் திறந்துள்ளது, அதனால் நீ உலகத்தை காண்கிறாய்" என்றார்.

பின் மூன்றாவது சீடன் "நான் என் சைக்கிள் சவாரி செய்யும் போது மந்திரத்தை ஓதிக் கொண்டே சென்றேன்" என்றான்.

அதற்கு குரு மூன்றாவது சீடனை "உனது மனதில் எண்ணங்கள் எளிதாக, புதிய சக்கரங்கள் போல சுழலும்" என்று பாராட்டினார்.

பின்னர் நான்காவது சீடன் "நான் எல்லா உயிரினங்களின் நல்லிணக்கத்தில் வாழ ஆசை கொண்டு சைக்கிளில் சவாரி செய்தேன்" என்றான்.

குருவும் அதற்கு அவனிடம் "நீ தீங்கு இல்லாத ஒரு தங்கமான பயணத்தை மேற்கொள்கிறாய்" என்று மகிழ்ந்து கூறினார்.

பிறகு ஐந்தாவது சீடன் குருவிடம் "நான் சைக்கிள் சவாரி செய்வதற்காக, என் சைக்கிளில் நான் சவாரி செய்தேன்" என்றான்.

அதற்கு குரு, அந்த சீடனின் முன் வணங்கி 'நான் உங்கள் சீடனாவேன்' என்று கூறினார்.

ஏனெனில் இந்த நான்கு சீடர்களும், குருவிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்று எண்ணி, மனதில் இருக்கும் உண்மையை மறைத்து, வித்தியாசமாக பதிலை அளித்தார்கள்.

ஆனால் கடைசியில் சொன்ன சீடன் “சைக்கிளில் எதற்கு சென்றாய் என்று கேட்டதற்கு, அவன் சவாரி செய்வதற்காக சென்றேன்” என்று

மனதில் இருக்கும் உண்மையை கூறியதால், குரு அவருடைய சீடனுக்கு சீடனாக ஆனார்.

எண்ணத்தை தூய்மையாக வைத்திருந்தால் எண்ணம் எல்லாம் நற்பயனாக மாறும். உண்மையைத் தவிர வேறு எந்த எண்ணமும் மனதில் உதிக்காது.

எண்ணி எண்ணிச் செயலாற்றும் பண்பு கொண்டால்
இன்பதுன்பம் என்ற சுழல் வேகம் குன்றும்..
எண்ணத்தில் இயற்கையிலே அமைந்திருக்கும்
இன்பமே மாறாது! அளவும் மீறா.” (ஞாக.பா.1528)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 13. மனவளர்ச்சி

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் ஜென் மாஸ்டர் ஒருவர் இருந்தார். அவருடன் இருபது வருடங்களாக, அவரது சீடன் ரின்சாய் என்பவன் இருந்தான்.

ஒரு நாள் ரின்சாய் மாஸ்டர் அமரும் இருக்கையில் அமர்ந்தான்.

அப்போது அங்கு வந்த மாஸ்டர், ரின்சாய் தனது இருக்கையில் அமர்ந்திருப்பதை பார்த்துவிட்டு, எதுவும் கோபப்படாமல் அமைதியாக ரின்சாயின் இருக்கையில் அமர்ந்தார்.

சிறிது நேரம் அவர்கள் இருவரும் எதுவும் பேசவில்லை.

சிறிது நேரம் கழித்து, ரின்சாய் மாஸ்டரிடம் “நீங்கள் வருத்தப்படுகிறீர்களா? நான் உங்களை அவமதித்துவிட்டேன் என்று நினைக்கிறீர்களா? நான் நன்றி கெட்டு நடப்பதாக நினைக்கிறீர்களா?” என்று கேட்டான்.

அதற்கு மாஸ்டர் சிரித்துவிட்டு “நீ முதலில் மாணவனாக இருந்து சீடனாக ஆனாய், இப்போது சீடனாக இருந்து மாஸ்டராக ஆக தகுதி உடையவனாக இருக்கிறாய்.

மேலும் என் வேலைகளை பகிர்ந்து கொள்ள நீ தகுதி உடையவனாகி விட்டாய் என்பதை நினைக்கும் போது, எனக்கு பெருமையாகத் தான் உள்ளது.

எனக்கு முன்பே அவை நடக்கும் என்பதும் நன்றாக தெரியும்” என்று கூறினார்.

### மனவளர்ச்சி – வேதாத்திரியம்

“காரணம் அறியாமல் காரியம் செய்பவன் பக்தன்.
காரணம் என்னவென காண முயற்சிப்பபோன் யோகி!
காரணம் கூறமுடியா எல்லை கண்டவன் முக்தன்!
காரணம் விளைவுகள் கண்டு செயலாற்றுவான் ஞானி!” (ஞாக.பா.1171)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 14.மானுடத்தின் வீரர்கள்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஓர் ஊரில் கசன் என்னும் துறவி மடத்தில் வாழ்ந்து வந்தார்.

ஒரு நாள் ஜப்பானை சேர்ந்த வீரர்கள், அந்த மடத்தை தங்களது

தலைமையகமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நினைத்து, அந்த மடத்திற்கு சாதாரணமாக சென்றனர்.

அங்கு இருந்த அந்த துறவி வீரர்களை அன்புடன் அழைத்தார்.

பின் அந்த மடத்தில் சமைக்கும் சமையல்காரனை அழைத்து, “இங்கு வந்திருக்கும் வீரர்களுக்கு விதவிதமான உணவுகளை செய்யாமல், நாம் உண்ணும் உணவையே சமைத்துவிடு” என்று கூறினார்.

கசனின் அந்த செயல் வீரர்களுக்கு பெரும் கோபத்தை மூட்டியது.

அதனால் வீரர்களுள் ஒருவன் அந்த துறவியைப் பார்த்து “நாங்கள் யார் என்று நினைக்கிறீர்கள்?

நாங்கள் எங்கள் உயிரை தியாகம் செய்து, நம் நாட்டை காப்பாற்றுகிறோம். ஏன் எங்களை நன்றாக கவனிக்க முடியாதா?” என்று கேட்டான்.

அதனைக் கேட்ட துறவி அவனிடம் “அதேப்போல் நாங்கள் யார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? நாங்களும் வீரர்கள் தான். நீங்கள் நாட்டை காப்பாற்றுகிறீர்கள் என்றால் நாங்கள் மனிதகுலத்தின் அனைத்து புலனறிவாற்றலையும் கட்டுப்படுத்தி பாதுகாக்கிறோம்” என்று கூறினார்.

“திருமூலர், வள்ளுவனார், இராம லிங்கர்,
திருவருளார், மணிமொழியார், தாயு மானார்,
பெருநோக்கப் பயன்விளக்கி உலகம் உய்யப்
பேரறமாம் அருட்தொண்டில் பங்கு கொள்வோம்” (ஞாக.பா.13)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 15. துன்பங்கள் குறைய வழி எது?

(ஜென்னும் வேதாத்திரியமும்)

டோசுய் என்பவர் ஒரு ஜென் மாஸ்டர். அவர் புத்த சமய நெறிகளைக் கடைபிடிப்பதை விட்டு, ஒரு பாலத்தின் கீழ் பிச்சைக்காரர்களுடன் வாழ்ந்து வந்தார்.

அப்போது டோசுய்வின் முதுமை காலத்தில், அவரது மீதமுள்ள வாழ்கையை கழிக்க, அவரது நண்பர் ஒருவர் அவருக்கு அரிசியிலிருந்து வினிகர் தயாரிப்பதைக் கற்றுக் கொடுத்தார். அதனை டோசுய் தனது மரணம் வரை தொடர்ந்து செய்தார்.

ஒரு முறை டோசுய் வினிகரை செய்து கொண்டிருக்கும் போது, தனது பிச்சைக்கார நண்பர்களில் ஒருவர், புத்தரின் படம் ஒன்றை அவருக்குக் கொடுத்தார்.

டோசுயும் மதப் பிணைப்புகளுக்கு, அப்பாற்பட்டு இருந்ததால், அந்த படத்தை வியப்புடன் ஏற்றுக் கொண்டார்.

பின் அந்த படத்தை தனது குடிசையின் சுவரில் தொங்கவிட்டு, மேலும் அதில் ஒரு வாசகம் ஒன்றையும் எழுதினார்.

என்ன வாசகம்? "திரு. அமிதா புத்தர்: இது குறுகிய அறை என்பதால், நான் மட்டும் தான் இங்கு தங்க முடியும். நீங்கள் ஒரு தற்காலிக விருந்தினர். நீங்கள் உங்கள் அழகான மாளிகையில் மறுபடியும் பிறந்து அங்கே தங்குங்கள். இதற்காக என்னை தவறாக எண்ண வேண்டாம்." என்று எழுதி இருந்தார்.

## துன்பங்கள் குறைய வழி எது? வேதாத்திரியம்

"வாழ்வினிலே அனுபோகப் பொருள் எண்ணிக்கை
வளரவிடக் கூடாது இன்பம் வேண்டின்." (ஞாக.பா.157)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 16. சீராக வாழ்வோம்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் தன் சீடர்களிடம் பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அவரிடம் சீடர்களுள் ஒருவன், "குருவே, நீங்கள் இன்பத்தில் மகிழ்ச்சியோ, துன்பத்தில் சோர்வோ அடைவதில்லை. ஆனால், இரண்டையும் தாங்கள் சமமாக எடுத்துக் கொள்கிறீர்கள் அல்லவா? இந்த குணம் உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டான்.

அதற்கு அந்த குரு "கழுதையிடமிருந்து தான்..." என்று உடனே கூறினார்.

உடனே அனைத்து சீடர்களும் "என்ன கழுதையிடமிருந்தா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டனர்.

"ஆமாம், அதனிடமிருந்து தான் கற்றுக் கொண்டேன்.

நீங்கள் கழுதையை கூர்ந்து கவனித்ததில்லையா?

காலையில் அது அழுக்கு துணிகளை சுமந்து செல்லும். மாலையில் சுத்தமான துணிகளை சுமந்து செல்லும் தானே! அதை வைத்து தான்" என்று சொன்னார்.

அப்போது மற்றவன் "இதில் என்ன குருவே இருக்கிறது, நீங்கள் அதனிடம் கற்று கொள்வதற்கு" என்று கேட்டான்.

அதற்கு குரு "ஆமாம், அது அழுக்கு துணிகளை சுமக்கும் போது வருத்தப்படுவதும் இல்லை, சுத்தமான துணிகளை சுமக்கும் போது மகிழ்வதும் இல்லை. அதைத் தான் கற்றுக் கொண்டேன்" என்று கூறினார்.

### சீராக வாழ்வோம் – வேதாத்திரியம்

“இன்பத்தும் துன்பத்தும், இயற்கையும் கற்பனையும் சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்.” (ஞாக.பா.1542)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 17. அச்சம் தேவையா?

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு பெரிய குருகுலத்தில் அனைத்திலும் மிகவும் திறமை வாய்ந்த ஒரு ஜென் குருவிடம் சகாதேவன், மகாதேவன் என்னும் இரு மாணவர்கள் நீண்ட நாட்களாக கல்வி பயின்று வந்தனர்.

அந்த குருவிற்கு தெரியாதது எதுவுமே இல்லை என்று சொல்லலாம்.

அத்தகைய அவரிடம் பயிலும் அந்த இரு மாணவர்களும் மிகவும் நெருங்கிய நண்பர்கள்.



அதில் மகாதேவன் நேர்மையானவன், எதையுமே மனதில் வைத்து பேசத் தெரியாதவன். எப்போதுமே வெளிப்படையாக பேசும் குணம் கொண்டவன். அவனுக்கு தான் கற்ற கல்வியை மற்றவர்களுக்கும் கற்பிக்க வேண்டும் என்ற ஆசை உண்டு. மேலும் தன்னைப் போலவே அனைவரும் நேர்மையாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவன்.

ஆனால் சகாதேவன் சற்று வித்தியாசமானவன். எதையும் வெளிப்படையாக பேச மாட்டான். மிகவும் பொறுமை சாலி, எந்த பிரச்சனைக்கும் செல்லாதவன். யார் என்ன சொல்லி, திட்டினாலும், ஏமாற்றினாலும், அதை தன் மனதிலே வைத்து, கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவன்.

ஒரு முறை விளையாடிக் கொண்டிருக்கும் போது, ஒரு மாணவன் அவனிடம் வம்பு இழுத்து, அடித்து திட்டிவிட்டான்.

அப்போது சகாதேவனுடன் அவனது நண்பன் மகாதேவன் இல்லை. இதனால் சகாதேவனுக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது.

உடல் நிலை சரியில்லை என்பதை அறிந்த அவனுடைய நண்பன் மகாதேவன், அவனை மருத்துவரிடம் அழைத்துச் செல்லாமல், அவனது குருவிடம் அழைத்துச் சென்றான்.

நீண்ட நாட்கள் அவர்களுடன் இருந்த அந்த குருவிற்கு சகாதேவனுக்கு எதனால் உடல் நிலை சரியில்லை என்று புரிந்துவிட்டது.

அதனால் அவர் சகாதேவனிடம் "இது உடலில் வந்த நோய் அல்ல. உன் மனதில் வந்த நோய். அதை நீ தான் சரி செய்ய வேண்டும்" என்று கூறினார்.

அந்த குரு, அவ்வாறு சொல்வதற்கு காரணம், அந்த சகாதேவனின் மனதில் பயத்தின் காரணமாக தைரியம் குறைவாகவும், அளவுக்கு அதிகமான பொறுமை, சகிப்புத் தன்மை அளவுக்கு அதிகமாக இருப்பது போன்றவை இருக்கின்றன.

இவையும் ஒரு வகையான நோய் தான். ஆகவே அந்த நோயை அவன் சரிசெய்து விட்டால், அவன் சரியாகிவிடுவான், என்பதற்காகவே சொன்னார்.

பயம் ஏன்? வேதாத்திரியம்

- “Fear is the greatest sin” என்பார் அருட் தந்தையவர்கள்.
- எனெனில் அறிவிற்கு துவைதநிலை (இரண்டுநிலை) இருக்கும் வரையில் பயம் இருக்கத்தானே செய்யும்.
- எல்லாம் ஒன்றே. அந்த ஒன்றில் நானும் ஒருவன் என்கின்ற அத்வைத நிலை உருவாகிவிட்டால் பயம் ஏது?
- புலிக்கும் பயப்படத் தேவையில்லை. பாம்பிற்கும் பயப்படத் தேவையில்லை.
- Anxiety மற்றும் நிலையற்ற உலகில் வாழ்க்கையில் பற்று (▯▯▯▯▯▯▯▯▯) இருந்தால்தானே “என்ன ஆகுமோ, ஏது ஆகுமோ” என்கிற பயம் இருக்கும்.
- இருந்தாலும் மனிதனுக்கு அச்சம் வேண்டும்.
- எதற்கு அச்சம் தேவை? ஆன்மா தீய செயல்களை செய்வதற்கு அஞ்சுதல் வேண்டும். இந்த அஞ்சதல் கூட, வாழ்நாள் முழுவதும் இராது. இயல்பான ஒழுக்க வாழ்விற்கு மாற்றம் ஏற்படும் வரை, ஒழுக்க வாழ்வு இயல்பான பிறகு அச்சம் என்பதற்கே இடமில்லை.
- முறையான தவம் மற்றும் அறம் இறை உணர்வு பெறுவதில் முடியும். ஒழுக்க வாழ்வின் உச்சகட்ட நிலை, இறை உணர்வை பெறச் செய்யும்.

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 18. நினைக்க வேண்டியது என்ன!

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒருமுறை பசுய் என்கிற ஜென் குரு தான் இறக்கும் நேரத்தில் தனது சீடர்களை அழைத்தார்.

“மாணவர்களே! நீங்கள் எப்போதும் எதற்கும் கவலை கொள்ளக்கூடாது.

அதிலும் இறப்பை கண்டு எந்த நேரமும் பயப்படக் கூடாது.

ஏனெனில் நமது மனம் எந்த ஒரு சாராம்சம் கொண்டு பிறந்தது அல்ல.

சொல்லப்போனால் மனதிற்கு எந்த ஒரு நிறம், வடிவம், இது தான் பிடிக்கும்,

சந்தோஷம் வந்தால் மகிழ்ந்தும், வருத்தத்தின் போது வலிகளும் கொள்வதில்லை.



அவை அனைத்தும் நீங்கள் உணர்வதிலேயே இருக்கிறது.

மேலும் உன் மனம் சரியில்லை என்றால் அதற்கு உடனே மனதை தளர விடாமல் இருக்க வேண்டும்.

அந்த நேரத்தில் மனம் சரியில்லையெனில், முதலில் உங்கள் மனதை நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

அதனால் நீங்கள் எதை எதிர் கொள்கிறீர்கள், எதனால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை உண்மையில் உங்களால் அறிய முடியும்.

மேலும் இந்த உலகில் எதுவும் நிரந்தரமானது இல்லை, எதற்கும் பேராசை பட வேண்டாம்.

முக்கியமாக இறப்பைக் கண்டு பயப்படக் கூடாது. இந்த உலகில் பிறந்த அனைத்திற்கும் இறப்பு என்பதும் உண்டு" என்று கூறினார்.

## மரணத்தை மறவாதே – வேதாத்திரியம்

“இறப்பதற்கே பிறக்கின்றோம் எனினும், அந்நாள்
  எண்ணத்திற்கெட்டு மட்டும் இந்த உண்மை
மறக்காமல் மற்றவர்ககுத் தீங்கு இன்றி
  மண்மீது உழைத்துண்டு அன்பாய் வாழ்வோம்.” (ஞாக.பா.1307)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 19.அறிவின் அனுபவம்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் ஜென் துறவி ஒருவர் மடாலயத்தில் வாழ்ந்து வந்தார். அதே ஊரில் மடாலயத்திற்கு அருகில் கண்பார்வை இல்லாத ஒருவன் வாழ்ந்து வந்தான்.

அவன் எப்போதும் கடவுளை வணங்கும் போது “கடவுளே! என்னை இப்படி கண்பார்வை இல்லாமல் படைத்துவிட்டாயே. உனக்கு கண்ணே இல்லையா?” என்று புலம்பி கொண்டே இருந்தார்.

அப்போது ஜென் குரு அவரது பிரார்த்தனையை கேட்டு, அவனை காணச் சென்றார்.

பின் அவனிடம் “இப்போது கடவுள் உன் முன் வந்து, உன்னிடம் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டால், என்ன கேட்பாய்? அதுவும் ஒரே ஒரு வரம் தான் கொடுப்பேன் என்று கேட்டால், என்ன கேட்பாய்?” என்று கேட்டார்.

அதற்கு அவன் சிறிது நேரம் யோசித்து, பின் அவரிடம் “ஒரு பெரிய ராஜ மாளிகையில், எனது மனைவி என் மகனுக்கு வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு ஊட்டுவதை, எனது வீட்டின் ஐந்தாவது மாடியிலிருந்து பார்த்து சந்தோஷப்பட வேண்டும்” என்று கேட்பேன்.

அதைக் கேட்ட குருவிற்கு அவனது புத்திசாலித்தனமான பதிலைப் பார்த்து, "நீ வாழ்க்கையில் உன் புத்திசாலித்தனத்தால் விரைவில் முன்னேறி விடுவாய்" என்று சொல்லி தன்னுடைய சீடனாக வைத்துக் கொண்டார்.

அவன் ஒரே வரத்தில் தனக்கு பார்வை வேண்டும், பெரிய ஐந்து மாடி மாளிகை வேண்டும், பெரிய பணக்காரனாக இருக்க வேண்டும் என்று கேட்டுவிட்டான்.

### அறிவின் அனுபவம் – வேதாத்திரியம்

"என்றென்றும் மாறாத, அளப்பரிய,
உவமையிலா, இயற்கை வேகம்,
அன்றன்றும் வாழ்க்கையிலே நினைந்துநினைந்து,
அனுபவிப்பான். அறிவறிந்தோன்!" (ஞாக.பா.1210)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 20 மௌனமே ஞானம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

சாரிபுத்தர் என்பவர், ஞானம் பெற, புத்தரைத் தேடி வந்தார்,

புத்தர் அவரிடம், "உன் மனதில் ஏராளமான கேள்விகள், எண்ணற்ற சந்தேகங்கள் இருப்பதை நான் அறிவேன்.

அதனால் உன் மனம் அலைபாய்கிறது. நீ என்னுடன் இரு. ஒரு வருடம் எதுவும் பேசாது மௌனமாயிரு. அடுத்த ஆண்டு உன் கேள்விகளுக்கு நான் தெளிவாக பதில் சொல்வேன்." என்று சொன்னார்.



சாரிபுத்தர் மௌனமானார். அன்று முதல் அவர் எதுவும் பேசுவதேயில்லை. ஓராண்டு கடந்தது. “சாரிபுத்தா! உன் ஐயங்களைக் கேள்,” என்றார் புத்தர். “கேட்க ஏதுமில்லை, பெருமானே!” என்றார், சாரிபுத்தர்.

ஆம். அவர் ஞானம் பெற்றுவிட்டார்.

மனமே, கேள்வியின் பிறப்பிடம். பதிலும் அங்கேயேதான் இருக்கிறது.

மௌனம், மனதின் கதவுகளை விரியத் திறக்கிறது. அப்போது, அங்கு நிறைந்திருக்கும் ஆரவாரங்கள், ஐயங்கள் ஆகியவை கும்பலாக வெளியேறி விடுகின்றன. அதன் பின், அங்கே, விடை, அமைதியாக மேடையேறுகிறது.

அன்பர்களே மௌனம் ஆன்மாவின் தாய்மொழி, நானே எனக்கு விடையானேன் என்று நீங்களே உங்களை ஒரு நாளில் கண்டு கொள்வீர்கள்.

## மோனத்தின் பெருமை – வேதாத்திரியம்

“மோன நிலையின் பெருமை யார் எவர்க்கு
    முன்படர்ந்து வாயாலே சொல்லக்கூடும்?
மோனமே அறிவினது அடித்தளம் ஆம்.
    மிகவிரிவு! எல்லையில்லை! காலம் இல்லை!
மோனத்தில் அறிவு தோய்ந்து பிறந்தால்,
    முன்வினையும் பின்விளைவும் நீக்கக் கற்கும்.
மோனநிலை மறவாது உடமை ஆற்ற,
    மென்மை, இன்பம், நிறைவு, வெற்றி அமைதியுண்டாம்.”
(ஞாக.பா.1640)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 21.ஆணவம் நீங்கிய அமைச்சர்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு நாட்டின் தலைமை அமைச்சராக, டாங் பரம்பரையைச் சேர்ந்த ஒருவர் இருந்தார்.


அவர் ஆட்சியை நன் முறையில் நடத்துவதில் மிகவும் சிறந்தவர்.

அவருக்கு புகழ், அதிகாரம் மற்றும் செல்வங்கள் இருப்பினும், புத்த சமயக் கருத்துகள் பற்றி அறிவதில் ஆர்வமுள்ளவராக இருந்தார்.

அதற்காக, அந்த ஊரில் இருக்கும் ஒரு ஜென் குருவிடம் அடிக்கடி சென்று கற்றுக் கொண்டார்.

அவ்வாறு கற்கும் அவர், தான் ஓர் அமைச்சர் என்ற எந்த ஒரு அகங்காரமும் இல்லாமல், ஓர் உண்மையான சீடன் போல நன்கு கற்று வந்தார்.

ஒரு நாள் அந்த அமைச்சர், ஜென் குருவிடம், “புத்த சமயத்தின்படி, ஆணவம் என்றால் என்ன?” என்று கேட்டார்.




அதைக் கேட்டதும், குருவின் முகம் சிவந்தது. பின் குரு கோபமாகத் தனது குரலை சற்று உயர்த்தி, “என்ன முட்டாள்தனமான கேள்வி இது?” என்று கேட்டார்.

இந்த மறுமொழியை எதிர்பாராத அந்த அமைச்சருக்கும் கோபமும், அதிர்ச்சியும் ஏற்பட்டன.

பின் குரு சிரித்துக் கொண்டே, “இதுதான் உண்மையான ஆணவம்” என்றார்.

இதுவரை குருவிடம் கோபம் கொள்ளாத சீடனாக இருந்த அமைச்சருக்கு, குரு கோபப்பட்டு பேசியதைக் கேட்டதும், ‘நான் ஒரு நாட்டின் அமைச்சர், என்னைப் பார்த்து எப்படி கோபத் தோடு பேசலாம் என்று எண்ணியபோது, தன்னுள் எழும்பிய கோபமே, உண்மையான ஆணவம் என்பது நன்கு புரிந்தது.

“தனது குறை ஆழ்ந்துணர்ந்து திருத்தம்பெற்றால்
தருக்கெழியும், பிறரிடமும் நட்பு ஓங்கும்.
மனது ஒரு தூய நிலையை நாடிச் செல்லும்.
மற்றவரும் இதன்விளைவாய் நலம் காண்பார்கள்.
“எனது நான்” எனும் இரண்டு சொற்களுக்கும்,
ஏற்புடைய கருத்துணரும் தகைமை கிட்டும்.
உனது சொல், செயல் எண்ணக் குறைகள் போக்க
உணர்ந்த தற்சோதனையைப் பழகிக் கொள்க” (ஞாக.பா.1613)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 22.கோபமும் காலிப்படகும்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் எப்போதுமே கோபப்படாமல், நீண்ட நாட்களாக, உடலில் எந்த ஒரு பிரச்சனையுமின்றி ஆரோக்கியமாக வாழ்ந்து வந்தார்.

அப்போது ஒருவர் வந்து அவரிடம், “நீங்கள் கோபப்படாமல் இருக்க காரணம் என்ன?” என்று கேட்டார்.



அதற்கு அந்த குரு “எனக்கு சிறு வயதிலிருந்தே படகில் பயணம் செய்வது என்றால் மிகவும் பிடித்திருந்தது.

அதனால் நான் தினமும் அருகிலிருக்கும் ஏரிக்கு சென்று, படகிலேயே நீண்ட நேரம் இருப்பேன். மேலும் படகிலேயே தான் தியானம் செய்வேன்.

ஒரு நாள் அதேப் போன்று படகில் அமைதியாக தியானம் செய்து கொண்டிருக்கையில், ஒரு காலிப் படகு வந்து என் படகை இடித்தது.

அதனால் நான் யாரோ கவனக்குறைவால் என் படகை இடித்துவிட்டார்கள் என்று நினைத்து, கண்களைத் திறந்து திட்டுவதற்கு முற்பட்டேன்.

ஆனால் என்னை இடித்த படகோ காலியாக இருந்தது. அதனால் நான் காலிப் படகிடம் கோபத்தை காண்பிப்பது முட்டாள் தனம் என்று எண்ணி அன்றிலிருந்து என் கோபத்தை விட்டுவிட்டேன்.

அன்று முதல் என்னை எவர் என்ன தான் திட்டினாலும், அவமானப்படுத்தினாலும், கோபப்படாமல், அப்போது நான் அந்த காலிப்படகை நினைத்து அமைதியாக சென்று விடுவேன்.

சொல்லப்போனால் அந்த காலிப்படகு எனக்கு ஒரு நல்ல பாடத்தை புரிய வைத்தது.” என்று கூறினார்.

<u>சினமும் அச்சமும் வாழ்வை சீர்குலைக்கும் – வேதாத்திரியம்</u>

“சினம் அடக்கி, அறுகுணத்தைச் சீரமைத்துக் கொண்டு
சிந்தனையை அகத்தவத்தால் உயர்த்தி நின்றபோது
மனமடக்கி பேரின்ப எல்லை நிற்க நிற்க,
மவன தவம் ஒருமாதம் காலம் ஏற்று ஆற்ற
இனம்பலவாம் எண்ண அலை ஒடுங்கி. ஓய்ந்தபோது,
எத்தனையோ தத்துவங்கள் இறைவிளக்கம் பெற்றேன்.
வனம்போக வேண்டாம்நாம். இல்லறத்திலிருந்து
வாழ்ந்த கொண்டே, தவத்தை ஆற்றி வேற்றிபெறலாம்.”
(ஞாக.பா.1562)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 23. வாழ்வோம் வளமோடு

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி தன் சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில், அவர்களிடம் “ஒருவருடைய நல்ல வாழ்க்கையின் ஆயுட்காலம் என்ன?” என்று கேட்டார்.

அதற்கு சீடர்களுள் ஒருவன் “வேறு எத்தனை நூறு வயது தான்” என்று கூறினான். குருவோ, “இல்லை” என்றார்.

“அப்படியெனில், 90 வயது” என்று மற்றவன் கூறினான். அதற்கும் “இல்லை” என்று குரு கூறினார்.

அப்படியே சீடர்கள், 80? 70? என்று சொல்ல, அதற்கும் மறுத்தார்.

பின் அவர்கள் பொறுமையிழந்து “வேறு என்னவென்று நீங்களே சொல்லுங்கள்” என்று கூறினர்.

அதற்கு குரு “ஒரு வினாடி தான்” என்று கூறினார்.

“அது எப்படி ஒரு வினாடியில் நல்ல வாழ்க்கையை வாழ்ந்ததாக சொல்ல முடியும்?” என்று அனைவரும் கேட்டனர்.

பின் குரு “நல்ல வாழ்க்கை என்பது ஒரு வினாடியில் தான் தெரியும். எப்படியெனில் ஒவ்வொரு வினாடியையும், வாழ்க்கையின் தொடக்கமாக நினைக்க வேண்டும்.

மேலும் அதையே முடிவு என்றும் நினைக்க வேண்டும். அதிலும் அந்த வினாடியில் எந்த ஒரு பழையதையோ அல்லது வருங்காலத்தையோ நினைத்து வாழக்கூடாது.

ஒரு வினாடி பிறக்கிறதென்றால், அதை முழுமையாக அனுபவிக்க வேண்டும். அது தான் உண்மையான நல்ல வாழ்க்கை” என்று சீடர்களுக்கு சொல்லி, உண்மையான வாழ்க்கையின் தத்துவத்தைப் புரிய வைத்தார்.

## வாழ்வோம் வளமோடு – வேதாத்திரியம்

“வாழ்க்கை வளத்துக்கேற்ற வகையனைத்தும், ஒருவர்
வழியோடு கற்ககாந்த தத்துவக் கலையே,
வாழ்க்கைத் துறைகள் அனைத்தும் ஊடுருவி, அறிந்து,
வளமாகத் தழைத்தோங்க வைக்கும் ஓர் பயிற்சி,
வாழ்க்கைக்கு வேண்டிடுவோர் வாரீர்! வாரீர்! என்று
வாழ்த்தியழைக் கின்றேன்யான் வளம்பெற்ற தாலே.
வாழ்க்கைக்கு மூலநிதி காந்த ஆற்றல் ஒன்றே.
வழிதெரிந்து அதைப்பெருக்கி வாழ்வோம்! வளமோடு,”
(ஞாக.பா.1760)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 24. அனுபவமே குரு.

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு முறை ஹகுயன் என்கின்ற ஜென் துறவி அவரது சிஷ்யர்களிடம் “ஒருவன் கடினமான செயல்களை சுலபமாக செய்வது எப்படி?” என்பதை பற்றி பேசிக் கொண்டிருந்தார்.

அதனை விளக்குவதற்காக ஒரு கதையை கூறினார்.

“ஒரு திருடனின் மகன் அவன் தந்தையிடம் தனக்கும் திருடுவதில் உள்ள ரகசியங்களை கற்று தர கேட்டான்.

அவனுடைய தந்தையும் அதற்கு ஒப்புக்கொண்டு அன்று இரவு ஒரு பெரிய மாளிகைக்கு திருடுவதற்காக அவனை அழைத்து சென்றான்.

அந்த வீட்டில் குடும்பத்தினர் அனைவரும் உறங்கி கொண்டிருக்கையில், திருடன் அவன் மகனை துணிகள் நிறைந்த அறைக்குள் அழைத்து சென்றான்.

மகனிடம் அங்குள்ள துணிகளை திருட சொன்னான். அவனுடைய மகனும் தந்தையின் சொல் படி திருடிக் கொண்டிருந்தான்.

அப்போது அந்த சிறுவனின் தந்தை மெதுவாக அறையின் வெளியே வந்து, பின் அவனை உள்ளே வைத்து பூட்டினான்.

பின்பு வீட்டில் உள்ளோரை எழுப்புவதற்காக, அந்த வீட்டின் வெளிப்புறம் வந்து கதவை தட்டிவிட்டு, வேகமாக தப்பி வீட்டிற்கு ஓடிவிட்டான்.

சிறிது நேரம் கழித்து, அவனது மகனும் வீடு திரும்பினான்.

அழுது கொண்டே அவனுடைய தந்தையிடம் “அப்பா ஏன் அப்படி செய்தீர்கள்? நான் எதையும் திருடவில்லை, தப்பிப்பதற்கு என்ன வழி என்று என் புத்தி கூர்மையை செயல்படுத்துவதிலேயே நேரம் அனைத்தும் போயிற்று” என்று கதறி அழுதான்.

அவனது தந்தையும் சிரித்து கொண்டே “மகனே, நீ கொள்ளை கலையில் முதல் பாடத்தை கற்று கொண்டாய்” என்று கூறினான் என்று சொல்லி கதையை முடித்தார்.

பிறகு சிஷ்யர்களிடம் இதைத் தான் மடிவது அல்லது நீந்துவது என்ற முறை என்பர்.

மேலும் “பயம் கொண்ட நிலையில், எவரொருவரும் செய்ய முடியாத காரியங்களையும் அவர்கள் தங்கள் வலிமை கொண்டு செய்து முடிப்பர்.

ஒருவரின் சொந்த அனுபவத்தினால் மட்டுமே எந்த ஒரு கடினமான செயலையும் எளிதில் செய்ய கற்று கொள்வது என்பது சாத்தியம்” என்று சொல்லி உணர்த்தினார்.

**சுயமாய் சிந்தித்தே தெளிவாய்** - வேதாத்திரியம்.

சொல்லால் மட்டும் நம்பாதே.
சுயமாய் சிந்தித்தே தெளிவாய்!” (ஞாக.பா.2)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 25.வாழ்வே ஒரு போராட்டமா?
### (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் தன் சீடர்களுக்கு “வாழ்க்கை என்றால் என்ன?” என்பதை தெளிவாக சொல்லிக் கொடுக்க, சீடர்களை அழைத்தார்.

அவர்களிடம் உதாரணத்திற்கு ஒரு பட்டாம்பூச்சி இந்த உலகை காண்பதற்கு முன் எவ்வாறு கஷ்டப்பட்டு வருகிறது என்ற ஒரு விஷயத்தை அவர்களுக்கு காண்பிக்க இருந்தார்.

அதனால் அவர்களிடம் பட்டாம் பூச்சியின் கூட்டினை காண்பித்து, இன்னும் சில நேரங்களில் இந்த பூச்சி நீண்ட போராட்டங்களுக்குப்

பிறகு வெளியே வந்துவிடும் என்றும் அதற்கு யாரும் உதவக் கூடாது என்றும் கூறி மடாலயத்திற்குள் சென்று விட்டார்.

அதைப் பார்த்த ஒரு சீடன், அது ஓட்டை உடைக்க மிகவும் கஷ்டப்படுகிறது என்று நினைத்து, அந்த ஓட்டை லோசாக உடைத்து விட்டான்.

ஆனால் அந்த பட்டாம் பூச்சி வெளியே வந்து இறந்து விடுகிறது. இதனால் அவன் அந்த பட்டாம் பூச்சியின் இறப்பிற்கு காரணமாகிவிட்டான்.

பின் துறவி வந்தார். ஓட்டை உடைத்த மாணவன் அழுதுக் கொண்டிருந்தான்.

எதற்கு அழுகிறாய் என்று கேட்ட போது, நடந்ததை சொன்னான்.

பின் குரு அவனிடம் பட்டாம்பூச்சி அத்தகைய போராட்டத்தை அனுபவிக்கக் காரணம், அதன் சிறகுகள் நன்கு வளர்வதற்கும், தன்னை வலுப்படுத்திக் கொள்ளவும் தான் காரணம் என்று சொன்னார்.

அதேப்போல் தான், நாமும் நமது வாழ்வில் இன்பமாக வாழ பல போராட்டங்களை சந்திக்க நேரிடும்,

அதற்காக மனமுடைந்து விடக் கூடாது. போராட்டங்களை சந்திக்க சந்திக்கத் தான் நமது மனமும் வலுவடையும்.

பின் எதற்கும் துணிச்சலோடு போராடி, வாழ்வில் முன்னேறலாம் என்று கூறி, அவர்களுக்கு ஒரு நல்ல அறிவைப் புகட்டினார்.

- “பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் பேராடிக் gகொண்டிருக்கும் ஜுவன் மனிதன்.” வேதாத்திரியம்

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 26.மன நிறைவு பெற வழி

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு ஊரில் செல்வந்தன் ஒருவன் தன் தொழிலால் நிறைய செல்வங்களை சேகரித்து வாழ்ந்து வந்தான்.

அவனிடம் நிறைய வேலையாட்கள் வேலை செய்து வருகின்றனர்.

என்ன தான் அவனிடம் செல்வம் இருந்தாலும், அவனது மனம் மட்டும் முழுமை அடையவில்லை.

அதற்காக அவன் ஒரு துறவியை சந்தித்து தன் பிரச்சனையை சொல்லி, அதற்கான காரணம் மற்றும் தீர்வதற்கான வழியைத் தெரிந்து கொள்ள விரும்பினான்.

ஒரு ஜென் துறவியை சந்தித்து, எல்லாவற்றையும் கூறினான்.

அவனது கேள்விக்கான விடையை தெளிவுபடுத்த, துறவி அவனை ஒரு மலை அடிவாரத்திற்கு அழைத்துச் சென்று, மூன்று கனமான கற்களைக் கொடுத்து, தூக்கிவரச் சொன்னார்.

அவனும் தூக்கினான். ஆனால் அவனால் நடக்க முடியவில்லை.

அதனால், துறவி அதில் ஒரு கல்லை மட்டும் தூக்கிப்போட்டு வரச் சொன்னார்.

அவனும் தூக்கிப் போட்டு, இரண்டு கற்களை தூக்கிக் கொண்டு சென்றான்.

சிறிது தூரம் கழித்து, அவனால் அதையும் தூக்க முடியவில்லை, ஆகவே அதில் ஒன்றை தூக்கிப் போடச் சொன்னார் துறவி.

அவனும் தூக்கிப் போட்டு நடக்க ஆரம்பித்தான்.

மீண்டும் சிறிது தூரம் சென்றதும் அவனால் முடியவில்லை, துறவியும் அதை தூக்கிப் போட்டு நடக்கச் சொன்னார்.

பின்னர் அவனும் எந்த சிரமமும் இல்லாமல் நடந்தான். பின் இருவரும் மலை உச்சியை அடைந்தனர்.

துறவி அவனிடம் "உன்னால் எப்படி அந்த கற்களின் கனத்தை தாங்க முடியாமல் தினறினாயோ, அதேப்போல் தான் உன்னால் செல்வத்தை வைத்துக் கொண்டு நிம்மதியாக இருக்க முடியவில்லை.

எவ்வாறு ஒவ்வொரு கல்லாக தூக்கிப் போட்டதால், நடக்க முடிந்ததோ, அதேப்போல் தான் நீ உன்னிடம் இருக்கும் செல்வத்தையும் அனைவருக்கும் கொடுத்து வந்தால், அவர்களது ஆசிர்வாதத்தால், உனக்கு ஒரு மனநிறைவு கிடைத்திருக்கும்.

எவ்வாறு மலை உச்சியை எந்த ஒரு கனமும் இல்லாமல் நிம்மதியாக அடைந்தாயோ, அதேபோல் நீயும் நீண்ட நாட்கள் எந்த ஒரு மனக்குறையும் இன்றி நிம்மதியுடன் இருப்பாய்" என்று சொன்னார்.

அன்று முதல் அவனும் அனைவருக்கும் வாரி வழங்கி வாழ்ந்து வந்து, மன நிம்மதி அடைந்தான்.

"வாங்கும் கடனும் தேங்கும் பணமும்
வளர, வளர வாழ்வைக் கெடுக்கும்." (வேதாத்திரியம்-மாக.)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 27. சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்
## (ஜென்னும் வேதாத்திரியமும்)

**சரியான பதிலடி !!!**

ஜென் துறவி ஒருவர், நீண்ட தூர பயணத்தை மேற்கொள்ள இருந்தார். அதனால் அவர் தன் மடாலயத்தில் இருந்து புறப்பட்டார்.

பயணம் செய்யும் போது, ஒரு பெரிய ஆற்றை கடக்க வேண்டியிருந்தது.

ஆனால் அந்த ஆற்றை கடக்க சாய்ந்து விழுந்த ஒரு தென்னை மரத்தை தான் அந்த ஊர் மக்கள் பயன்படுத்தினர்.

இந்த மரத்தில் ஒருவர் மட்டுமே செல்ல முடியும். அத்தகைய குறுகலான மரம் அது.

துறவியும் கடப்பதற்கு மரத்தில் ஏறி நடக்க ஆரம்பித்து, கரையை கடக்கும் அளவில் வந்துவிட்டார்.

அப்போது மறுகரையில் இருந்து, ஒருவன் ஆற்றை கடக்க ஏறி வந்தான்.

அவன் மிகவும் கோபக்காரன், யாரையும் மதிக்காதவன். இதனால் அவன் ஊரில் உள்ளோரிடம் கெட்டப் பெயரைத் தான் ஈட்டினான்.

ஆனால் அவனிடம் துறவி அன்புடன், "தம்பி, எனக்கு சிறிது வழிவிடுங்கள், நான் இந்த ஆற்றை கடக்க இன்னும் சிறிது தூரம் தான் உள்ளது. கொஞ்சம் வழிவிட்டால் நன்றாக இருக்கும்" என்று கேட்டார்.

அதற்கு அவன், "முட்டாள்களுக்கு வழிவிடும் பழக்கம் எனக்கு இல்லை" என்று ஆணவத்தோடு கூறினான்.

ஆனால் பெரியவர் எதுவும் பேசாமல், திரும்பி சென்றார். பின் அவன் “எதற்கு எனக்கு வழிவிட்டீர்கள்?” என்று கேலியாக கேட்டான்.

துறவி அதற்கு “முட்டாள்களுக்கு வழிவிடும் பழக்கம் எனக்கு உண்டு” என்று கூறி மறுபடியும் நடக்க ஆரம்பித்தார்.

“இன்பத்தும் துன்பத்தும், இயற்கையும் கற்பனையும்,
சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்.” (வேதாத்திரியம்-மாக்.)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 28. வெற்றியின் இரசியம்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவி ஒருவர் எப்போதும் தனது சீடர்களுக்கு மாலை வேளையில் புத்தியை புகட்டும் சிறுகதைகளை சொல்வதை வழக்கமாக பழக்கமாக கொண்டார்.

அன்றும் அதேப்போல் தனது சீடர்களை அழைத்து கதை சொல்ல ஆரம்பித்தார்.

அவர் சீடர்களிடம், “இதுவரை நான் உங்களிடம் கதையைக் கூறி, அதற்கான சிந்தனையையும் சொல்வேன். ஆனால் இப்போது நீங்கள் நான் சொல்லும் கதையை புரிந்து கொண்டு, கேட்கும் கேள்விக்கு சரியாக பதில் சொல்ல வேண்டும்” என்று கூறினார்.

அதற்கு சீடர்களும் “சரி, குருவே!” என்று கூறி, அந்த கதையை மிகவும் கூர்மையாக கேட்க ஆரம்பித்தனர்.

“ஒரு ஊரில் தவளை போட்டி நடந்தது. அந்த போட்டியில் நிறைய தவளைகள் பங்கு கொண்டன. அது என்ன போட்டியென்றால், உயரமான குன்றின் உச்சிக்கு யார் முதலில் செல்வது என்பது தான்.

அந்த உச்சியின் உயரத்தைப் பார்த்து, அங்கு கூடியிருந்தவர்கள் எந்த தவளையும் இந்த உச்சியை அடைய முடியாது என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

ஆனால் அதில் ஒரு தவளை மட்டும் அவர்கள் பேசுவதை கூர்மையாக பார்த்தது.
பின் போட்டி தொடங்கியதும், அனைத்து தவளைகளும் அடித்து பிடித்து, ஒன்றன் மேல் ஒன்றாக ஏறி, வழுக்கி விழுந்தன.

ஆனால் ஒருசில தவளைகள் சற்று நிதானமாக ஓரளவு உயரத்தை அடைந்து, முடியாமல் கீழே வந்துவிட்டன.

ஒரு தவளை மட்டும் உயரத்தை பொருட்படுத்தாமல் ஏறி உச்சியை அடைந்தது.

அங்கு கூடியிருந்த அனைவருக்கும் ஒரே ஆச்சரியம். பின் பரிசை கொடுப்பதற்காக அந்த வெற்றி பெற்ற தவளையைப் பார்த்து, உங்கள் வெற்றிக்கு காரணம் என்ன என்று கேட்டால், அந்த தவளை எதுவுமே பேசாமல் இருந்தது.

ஏன்?" என்று குரு கேட்டார்.

அனைத்து சீடர்களும் அவர்களுக்குள் ஒரே குழப்பத்தில் இருந்தனர்.

பின்னர் அவர்கள் "தெரியவில்லையே" என்று குருவிடம் கூறினர்.

அதற்கு குரு "வேறு எதுவும் இல்லை, அந்த தவளைக்கு காது மற்றும் வாய் பேச வராது, அதனால் தான் அது எதுவும் பேசவில்லை" என்று கூறினார்.

அது மட்டுமல்லாமல், "அந்த தவளை வெற்றி என்னும் நோக்கத்தை மட்டும் மனதில் வைத்து போட்டியில் பங்கு கொண்டதால் தான், அதனால் வெற்றி பெற முடிந்தது" என்பதையும் கூறி சென்று

விட்டார்.

## அறிவோடு – விழிப்பாய் இரு – வேதாத்திரியம்

"ஒன்றி புள்ளியாய் ஒடுங்கி நீ இரு.
அன்றி விரிந்திடில் ஆராய்ச்சியோடிரு,
நின்றிடு அகண்டாகார நிலையினில்,
வென்றிடுவாய் புலன் ஐந்தையும் வெற்றியே." (மாக்கோலம்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 29.பிறப்பும் இறப்பும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் ஞானி ஒருவரின் மனைவி இறந்து விட்டார். துக்கம் விசாரிக்க ஊரே திரண்டு வந்திருந்தது.

எல்லோர் முகத்திலும் வருத்தம்,கண்ணீர்.

ஆனால் ஞானியோ கைகளால் தாளம் போட்டபடி பாடிக் கொண்டிருந்தார், சர்வ சாதாரணமாக!

வந்தவர்களுக்கு அதிர்ச்சி.

ஒருவன் துணிந்து கேட்டான், "குருவே, நீங்களே இப்படி செய்யலாமா?

என்ன இருந்தாலும் இவ்வளவு காலம் உங்களுடன் வாழ்ந்த உங்கள் மனைவி இறந்திருக்கும்போது, நீங்கள் கவலையின்றி பாடிக் கொண்டிருக்கிறீர்களே?

ஞானி சொன்னார், "பிறப்பில் சிரிக்கவோ.இறப்பில் அழுவதற்கோ என்ன இருக்கிறது?

பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை.

என் மனைவிக்கு முன்பு உடலோ, உயிரோ இல்லை. பிறகு உயிரும் உடலும் வந்தன.

இப்போது இரண்டும் போய்விட்டன. இடையில் வந்தவை இடையில் போயின.

இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது?"

"பிறந்தவர்கள் அனைவருமே<br>
  பின் இறந்தார் இறப்பார்<br>
பிளவில்லா கருத்து இது<br>
  பேருலகில் எல்லார்க்கும்" (மாக்கோலம்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 30தொண்டே தொழுகை

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

**அது** ஒரு புத்த மடாலயம். அந்த ஆசிரமத்தின் முன்னும், பின்னும் இருந்த மரங்களில் இருந்து விழுந்த இலைகள் சருகுகளாகவும், குப்பைகளாகவும் மாறியிருந்தன.

மடத்தின் சீடன் ஒருவன், அந்த குப்பைகளையெல்லாம் பெருக்கி, ஒரு மூலையில் ஒதுக்கி குவித்தான்.

அப்போது மடாலயத்தின் குரு அங்கு வந்தார். சீடனைப் பார்த்து, ‘இந்த அதிகாலையில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?’ என்றார்.

சீடனோ, ‘சுத்தம் செய்து கொண்டிருக்கிறேன் சுவாமி’ என்றான்.

‘எதை?’ என்றார் குரு.

‘எதை எதையெல்லாம் சுத்தம் செய்ய முடியுமோ, அதையெல்லாம்’ என்றார் சீடன்.

இத்தோடு அவர்களது உரையாடல் நிற்கவில்லை.

சீடனைத் தொடர்ந்து குரு கேட்டார், ‘எதுவரை?’ .

அதற்கு சீடன், ‘எட்டிய மட்டில்’ என்றான்.

‘சரி.. புத்தருக்கு முன்பா?... புத்தருக்கு பின்பா?’ என்றார் குரு.

சீடன், ‘இரண்டுக்கும் நடுவில்’ என்றான்.

குருவும் ‘மிகவும் சரி..’ என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்று விட்டார்.

இப்படி புதிரான கேள்விகளைக் கேட்டு பதில் பெறுவது, ஜென் குருமார்களின் இயல்பு. புதிதாக இந்த உரையாடல்களை கேட்பவர்கள்தான் குழம்பிப் போவார்கள்.

மேற்கண்ட உரையாடலைக் கேட்ட ஒருவனும் அப்படித்தான் குழம்பிப் போனான். அவன் அப்போது தான் அந்த மடாலயத்தில் புதியதாக இணைந்திருந்தான்.

குழப்பம் மேலிடவே, சுத்தம் செய்து கொண்டிருந்த சீடனை நெருங்கி, ‘நீ குருவிடம் பேசியது எதுவுமே எனக்கு புரியவில்லை. நீ சுத்தம் செய்வதைப் பார்த்து குரு, ‘எதை’ என்கிறார்.

‘எதுவரையில்’ என்கிறார்.

‘புத்தருக்கு முன்பா, பின்பா?’ என்கிறார்.

புத்தர் இறந்து பல வருடங்கள் ஆன நிலையில், இது என்ன புதுவிதமான கேள்வி?’ என்றார் அந்தப் புதியவன்.

‘இந்த உலகம் தோட்டம் போன்றது. அதில் தேவையற்ற, மக்கிப்போன குப்பைகளைப் போல் கெட்டதும் நிறைந்திருக்கிறது. அதை தேவையற்றது என்று விட்டு விட முடியுமா? அதைத்தான் ‘சுத்தம் செய்கிறேன்’ என்றேன்.

எதை, எதை சுத்தம் செய்ய முடியுமோ, அதைத்தான் சுத்தம் செய்ய முடியும் என்பதால்தான், ‘எதை எதை முடியுமோ அதை’ என்றேன்.

அவரவர் சக்திக்கு எவ்வளவு முடியுமோ அவ்வளவுதான் இயலும், அதனால்தான் ‘எட்டியமட்டில்’ என்று கூறினேன்’ என்றான் சீடன்.

அந்தப் புதியவன் ‘அதுசரி.. புத்தருக்கு நடுவில் என்றாயே.. அது எப்படி?’ என்றான்.

‘உலகம் நலம் பெற இதற்கு முன்பு எத்தனையோ புத்தர்கள் தோன்றி இருக்கிறார்கள். இப்போதும் புத்தர்கள் இருக்கிறார்கள். இன்னும் புத்தர்கள் தோன்றுவார்கள். அப்படி வரப் போகிறவர்களுக்கு முன்பு, என்றால் இயன்றவரை சுத்தம் செய்கிறேன் என்பதைத்தான் புத்தருக்கு நடுவில் என்றேன்’ என்று விளக்கம் அளித்தான் சீடன்.

## மனத்தூய்மை பெறுவோம் – வேதாத்திரியம்

“சிந்தனையில் ஓரளவு உயர்ந்தோ ரெல்லாம்
    சீர்திருத்தம் உலகினிலே மலரவென்ற,
எந்தவொரு அளவேனும் நினைக்கின் றார்கள்,
    எனினும் இவர் ஒவ்வொருவர் போக்கை நோக்க
விந்தையே!  பிறர்மட்டும் இவருக்கொப்ப

வினையாற்றி உயிர்வாழ விரும்பு கின்றார்!
இந்தபெரு தன்மைக்கு, தான் திருந்த
எண்ணுவோர் அரிதரிது! எவ்வாறு உய்வோம்?" (ஞாக.பா.1172)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 31. பழக்கமும் விளக்கமும்

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு மடாலயத்தில் துறவியும் அவரது சீடர்களும் மாலை நேரம் தியானம் செய்து கொண்டிருந்தனர்.

மடத்திலிருந்த ஒரு பூனை சத்தம் போட்டுக்கொண்டே அங்கும் இங்கும் உலவிக் கொண்டிருந்ததால், தியானத்தில் இருந்த ஒருமைப்பாட்டைக் கலைத்துக் கொண்டிருந்தது.

அதனால் அந்த துறவி "பூனையைக் கட்டிப்போடுங்கள்" என்று உத்தரவிட்டார்.

சில ஆண்டுகள் கழித்து அந்த துறவி இறந்து விட்டார்.

ஆனாலும் அந்த பூனையைக் கட்டிப் போடும் பழக்கம் தொடர்ந்து கொண்டிருந்தனர்.

மேலும் சில வருடங்கள் கடந்தன. அந்த பூனையும் இறந்து விட்டது.

வேறொரு பூனை வரவழைக்கப்பட்டு கட்டி வைக்கப்பட்டது.

பல ஆண்டுகள் கழித்து சீடர்கள் ,"நம் மத வழக்கப்படி பூனையை தியான நேரத்தில் கட்டி வைக்க வேண்டும்" என நூற் குறிப்புகள் எழுதி வைத்தனர்.

"பழக்கத்திற்கும் கூர்ந்த விளக்கத்திற்கும் இடை

பாருலகில் மனிதரெல்லாம் போராடுகின்றார்
பழக்கத்தை வளர்த்த மக்கள் மாற்றுவது கடினம்
பாலர்களின் நற்பழக்கம் பலன் விளைக்கும எளிது.” (ஞாக.பா.634)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 32. இது கடந்து போகும்

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

ஜென் துறவியிடம் சீடன் சொன்னான்:

“என்னுடைய தியானம் மிகவும் கொடுமையாக இருக்கிறது. என் கவன ம் முழுக்க சிதறி விடுகிறது. கால்கள் வலிக்கிறது. நான் சற்று தியானம் செய்ய ஆரம்பித்த சிறிது நேரத்தில் தூங்கி விடுகிறேன். மிகவும் கொடுமையாக இருக்கிறது”

ஜென் துறவி சொன்னார்: “இது கடந்து போகும்”

சில நாட்கள் கழித்து ஜென் துறவியிடம் சீடன் சொன்னான்:

“இப்போதெல்லாம் என் தியான அனுபவம் அற்புதமாக இருக்கிறது. தற் போதெல்லாம் விழிப்புணர்வுடன் இருக்கிறேன்.

மிகவும் அமைதியான இருக்கிறேன். மிகவும் அற்புதமாக இருக்கிறது”

ஜென் துறவி சொன்னார்: “இது கடந்து போகும்”

## இன்ப துன்ப உணர்ச்சிகள் – வேதாத்திரியம்

“உடலுக்குள் உயிர்சக்தி சுழன்று ஓட,
உணர்ச்சியென்ற விளைவுண்டாம். இயற்கை ஈது.
உடலினுள் அணுஅடுக்கு அமைப்பு கட்கு
ஒத்துதவி உயிர்ஓட இனிமை இன்பம்.
உடலில் உயிர் ஓட்டமது முறை பிறழ்ந்தால்,
உடல்கட்டுக் குலைந்து மின்சாரம் தாக்கும்.
உடல்தாங்கா உணர்ச்சிமிகும் துன்பம் ஈதே!
உடல்நிலையும் உயிர்நிலையும் ஒத்துணர்விர்!” (ஞாக.பா.1249)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 33. சித்து வேண்டாமே!

## (ஜென்னும் வேதாத்திரியமும்)

இரண்டு ஜென் குருக்களின் சீடர்கள் பேசிக் கொண்டிருந்தனர். அகிரா என்ற சீடன் தனது குருவின் அருமை பெருமைகளை எல்லாம் விளக்கினான்.

“எங்கள் குரு மாயா ஜாலங்களின் மன்னன்.

ஆற்று நீரின் மேல் நடப்பார், காற்றிலே பறப்பார், தீயிலே குளிப்பார், புயலை எதிர்ப்பார். இப்படி பல அதிசயங்களை செய்வார்.

உங்கள் குரு என்ன செய்வார்?”, என்று அகிரா, ஜிங்ஜுவிடம் கேட்டான்.




ஜிங்ஜு `எனது குரு ஆற்று நீரில் குளிப்பார், காற்றை சுவாசிப்பார், தீயை பயன்படுத்தி சமைப்பார், புயலைக் கண்டால் மடத்தில் ஒளிந்து கொள்வார். நீ சொல்வது போல் எல்லாம் எதுவும் செய்ததில்லையே. எதற்கும் அவருக்கு என்ன மாயாஜாலம் தெரியும் என விசாரித்து விட்டு வருகிறேன், என்றான்.

அடுத்த நாள் அகிராவும், ஜிங்ஜுவும் சந்தித்து கொண்டனர். `

எங்கள் குருவிடம் உங்களுக்கு என்ன மாயாஜால அதிசயங்கள் செய்ய தெரியும்? என்று கேட்டேன்.”

அதிசயங்கள் எதுவும் நிகழ்த்தாமல் சாதாரணமாக இருப்பதுதான் எனது அதிசயம்” என்று என் குரு சொன்னார் என்றான் ஜிங்ஜு

## சித்து வேண்டாம் – வேதாத்திரியம்

“சீவனில் சிவனைக் கண்டு சிந்தனையில் தெளிந் தோர்க்கு
ஆவதென் ஜாலசித்தால்? அத்தகைய கீழ்த்தரத்தில்
போவரோ புகழைத்தேடி! புல்லர்க்கே தகுதி யாகும்
பாவமாம் பாமரர்க்குப் பயம் ஆசை, வியப்பு காட்டல்.”
(ஞாக.பா.538)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

# 34. ஞானத்தின் முதிர்ச்சி

(ஜென்னும் வேதாத்திரியமும்)

ஒரு குருவும் அவருடைய சீடர்களுடம் ஆற்றங்கரையோரம் கலகலப்பாகப் பேசிக்கொண்டே சென்றனர்.

ஒரு சீடன் கேட்டான், ‘குருவே, பூர்வாசிரமத்தில் நீங்கள் ஒரு பெரிய போர் வீரராக இருந்ததாகவும், பல நாடுகளுக்குப் பயணம் செய்து வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்ததாகவும் மூத்த சீடர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள்... நிஜம்தானா?’

‘நிஜம்தான்.. ஆனால் அதெல்லாம் அந்தக் காலம். இப்போது நான் ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டேன்...!’ என்றார் குரு.

‘ஏன் குருவே? போர் தவறா? ஆயுதங்களே வேண்டாமா?’

‘சரி தவறு என்பதல்ல என் வாதம்... ஒரு கட்டத்துக்குமேல் புத்திக் கூர்மையும் அமைதியையும் விட சிறந்த ஆயுதம் எதுவும் இல்லை என்று புரிந்துவிட்டது எனக்கு!”

குருவின் வார்த்தைகளில் சீடர்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அவரை சோதித்துப் பார்த்துவிட முடிவு செய்து, ஒரு திட்டம் போட்டனர்.

‘நாளை குரு தியானத்தில் இருக்கும்போது, நாம் இருவரும் மறைந்திருந்து அவரைத் தாக்குவோம். அப்போது அவர் ஆயுதங்களை எடுக்காமல் நம்மை எப்படிச் சமாளிக்கிறார் என்று பார்ப்போம்,’ என்று முடிவு செய்தனர்.

மறுநாள் வகுப்புகள் முடிந்ததும், குரு வழக்கம்போல தியானத்தில் ஆழ்ந்துவிட, இந்த இரு சீடர்கள் மட்டும் ஓலை தட்டிகளுக்கு அப்பால் மறைந்து கொண்டனர்.

சில நிமிடங்கள் கழித்து இருவரும் மெல்ல வெளியில் வந்தனர். பேசி வைத்தபடி இருவரும் குருவின் மீது ஏக காலத்தில் இரு பக்கமிருந்தும் பாய்ந்தனர்.

குரு முகத்தில் எந்த சலனமும் இல்லை. அவர்கள் பக்கத்தில் நெருங்கும்வரை கண்மூடி அமைதியாக இருந்த குரு, கடைசி விநாடியில் சற்று முன்னே வந்து குனிந்துகொண்டார்.

சீடர்கள் இருவரும் மடேர் என்று மோதிக் கொண்டு தரையில் விழுந்து உருண்டனர்.

எதுவும் நடக்காததுபோல் தியானத்தைத் தொடர்ந்தார் குரு!

- பக்தி எதையும் எடைபோடாது ஆனால் ஞானம் எதையும் எடைபோடாமல் விடாது." (வேதாத்திரியம்)

வேதாத்திரிய ஜென் சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

.

# ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2

## Youtube links.

1. குருவின் சேர்க்கை https://youtu.be/Mkq14rSLJpk

2. சினமும் அச்சமும் வாழ்வைச் சீர்குலைக்கும் https://youtu.be/Cd6-_sZzb08

3 இன்று என்பதே நிஜம் https://youtu.be/OvgaZCqJd3o
4. கோபம் ஆன்மீக வாழ்வுக்குத் தடையா? https://youtu.be/N0LoVsKjBoI
5. மகிழ்ச்சிக்கு வழி எது? https://youtu.be/5Dk3r4-xwHM
6. ஒப்பீடா? பொறாமையா?" https://youtu.be/LwQOuyGKRlI
7. குற்றமே காணும் குறையுடையோர் https://youtu.be/yfIB6Bk7cGQ
8. தான் என்ற செல்வாக்குப் பற்று https://youtu.be/Fkc7FcDnj70
9. அறிவுரை எப்படி இருக்க வேண்டும்? https://youtu.be/6VA1nIHXq1E
10. பணிவு கனிவு துணிவு https://youtu.be/jgns6Cd4T7o

11. தொண்டாற்றி இன்பம் காண்போம் https://youtu.be/RjMzqCotGc
12. சீடனும் குருவும் https://youtu.be/zffBazAVn50
13. மனவளர்ச்சி https://youtu.be/krakm0OwHZA
14 .மானுடத்தின் வீரர்கள் https://youtu.be/JVT1f6rSt0s
15. துன்பங்கள் குறைய வழி எது? https://youtu.be/2kqVQ3QHIxI
16. சீராக வாழ்வோம் https://youtu.be/R-BDGaT3eQY
17. அச்சம் தேவையா? https://youtu.be/uLF72gdm5zM
18. நினைக்க வேண்டியது என்ன! https://youtu.be/Tols0xYBdec
19 அறிவின் அனுபவம் https://youtu.be/8mXniGhpur0
20 மௌனமே ஞானம் https://youtu.be/vbSTlO9lJdE
21. ஆணவம் நீங்கிய அமைச்சர் https://youtu.be/zEYNsCs2Z4A
22. <u>கோபமும் காலிப்படகும் https://youtu.be/3ombDnrJGRY</u>
23. வாழ்வோம் வளமோடு https://youtu.be/FoZ4MfSFS8
24. அனுபவமே குரு https://youtu.be/FybvY7Ch9JI
25. வாழ்வே ஒரு போராட்டமா? https://youtu.be/R2jB4HvqRjs
26. மன நிறைவு பெற வழி https://youtu.be/-VPYLDqtq7s
27. சிந்தித்து அறிபவன், சிறப்பாக வாழ்வான்
https://youtu.be/axd8dvYeAgc
28. வெற்றியின் இரசியம் https://youtu.be/tFL5vE4NT1U
29. பிறப்பும் இறப்பும் https://youtu.be/_D_ZflGU2qk
30. தொண்டே தொழுகை https://youtu.be/nGJAAl5IU7o
31. பழக்கமும் விளக்கமும் https://youtu.be/YD27aX-4uUY
32. “இது கடந்து போகும்” https://youtu.be/kLCR-OfbTtc
33. சித்து வேண்டாமே! https://youtu.be/3XV9tttMWhM
34. ஞானத்தின் முதிர்ச்சி <u>https://youtu.be/NMu4cwypsRA</u>

## துணைநின்ற நூல்கள்


1. ஜென் கதைகள், இணையதளம்
2. ஞானக்களஞ்சியம் பாகம் 1 & 2, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. மாக்கோலமாய் விளைந்த மதி விருந்து, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு

4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, பாகம்1.2.3. விஜயா பதிப்பகம், கோவை.
5. ஞானம் தரும் ஜென் கதைகள், அம்பிகா சிவம், கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
6. ஜென் கதைகள், ஏ.சோதி, நன்மொழிப் பதிப்பகம், புதுச்சேரி
7. ஜென் கதைகள், உதயதீபன், மீனாட்சி பதிப்பகம், சென்னை
8. உலக சமாதானம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
9. Zen Stick – karn Rahul - Kindly Store
10. Tanya"s Collection Of Zen Stories – Schmid Tanya

# ஆசிரியரின் பிற நூல்கள்

PDF www.banukumar.in

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?

3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?

25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27.தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு

2. தவம்

## ஆராய்ச்சி

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiriam banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 106 தலைப்புகளில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து

22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை

57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்கோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை

92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
108.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்